தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C.12 / 2025

03.09.2025.

PW : 15

அனிதா, க/பெ. திருமூர்த்தி

சாட்சி மீண்டும் மனுவின்பேரில் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ள விவரங்கள் எல்லாம் எனக்கு நினைவில் உள்ளது என்றால் சரிதான். நான் வலங்கைமான் கூட்டுறவு சிக்கன நாணய கடன் சங்கத்தில் கடன் பெற்றிருந்தேன் என்றால் சரிதான். அதே சமயத்தில் வலங்கைமான் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிலும் வீடு கட்டுவதற்காக கடன் பெற்றிருந்தேன். எனக்கு சம்பள பில்லில் கூட்டுறவு சங்க கடன் பிடித்தம் இருந்தால் எங்கள் வங்கியில் கூடுதலாக கடன் பெறமுடியாது என்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாளர் தெரிவித்தார்.

2) 2013 ஆம் ஆண்டு ஜுன் மற்றும் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதத்தில் ஆஜர் எதிரியிடம் நேரடியாக தொகை கொடுத்தேன் என்ற விவரம் தொடர்பாக தேதியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்லவிதத்தில் சொன்னபடி எதிரியிடத்தில் கடன் தொகை எதுவும் செலுத்தவில்லை என்றும் அதனால்தான் தேதியை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

3) என்னுடைய முதல்விசாரணையில் நான் பணிபுரியும் பள்ளிக்கூடத்திற்கு சங்கத்தின் செயலாட்சியர் மற்றும் சங்கத்தில் பணிபுரியும் நபர்கள் வந்து என்னை கடன்தொகையை செலுத்தும்படி மிரட்டினார் என்ற விவரத்தை போலிசாரிடமோ, பிரிவு 81 விசாரணை அதிகாரியிடமோ சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4) அசாஆ 48 ன் வரிசையானது 2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட தொகையாகும் (Adjustment) என்றால் சரிதான். நான் எனது கடன்தொகையை திரும்ப செலுத்துவதற்கு நான் சங்கத்திற்கு அதிகம் வரமாட்டேன் என்றும், எனக்காக தொகை செலுத்த ராஜய்யா என்ற ஆசிரியர்தான் வருவார் என்றால் சரிதான். என்னுடைய கடன்தொகையின் மாதாந்திர தவணை தொகை எவ்வளவு என்ற விவரங்களை பிரிவு 81 விசாரணை அதிகாரியிடமோ அல்லது போலிசாரிடமோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

5) நான் பெற்ற கடன்தொகையை மாதாமாதம் திரும்ப செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான் பல்வேறு தேதிகளில் தொகையை திருப்பி செலுத்தியதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) நான் தவணை தொகையை முழுமையாக செலுத்தாததால்தான் தவணை தொகைக்குரிய ரசீதுகளை விசாரணை அதிகாரியிடம் காண்பித்து ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தவணை தொகையை முழுமையாக செலுத்தாமல் விசாரணை அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிமீது குற்றஈர்ப்பு வரும்படி பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

LATHA

Digitally signed by LATHA
Date: 2025.09.03 16:24:06 +0530

தலைமை நீதித்துறை நடுவர் ,

திருவாரூர்